DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

*******

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SANKARAPURAM.**

| | | |
|---|---|---|
| Case No. | CC .No. | 105/2025 |
| Prosecution: | அ.சா | 6 |
| Defence: | | |
| Court: | | JM Court, Sankarapuram. |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | தனுஷ் |
| **Father Name** | ~ | பழனிசாமி |
| **Village** | ~ | புத்திராம்பட்டு |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day of Dt. 10.08.2026.

1, 2 எதிரிகள் ஆஜர்.

முதல் விசாரணை.

நான் தற்போது புத்திராம்பட்டு கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். புத்திராம்பட்டு கிராமத்தில் அமைந்துள்ள முனியப்பன் கோவிலில் சிலை உடைத்த வழக்கு சம்பந்தமாக போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை செய்து போலிசார் அங்கு வந்ததற்கு சாட்சியாக என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் 25.09.2024ம் தேதியன்று தயார் செய்யப்பட்ட கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பமும் முனியப்பர் கோவிலில் கையொப்பம் செய்தேன். **பார்வை மகசரில் உள்ள 1வது கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ-5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 25.09.2024ம் தேதியன்று கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1வது கையொப்பம் அ.த.சா.ஆ-6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –

சம்பவம் நடந்த இடத்திற்கு நான் செல்லவில்லை என்றும், காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. போலிசார் என்னிடம்

எழுதப்படாத வெள்ளை தாளில் தான் கையொப்பம் வாங்கினார்கள் சரிதான். இத்துடன் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.